# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 76/2015

## Deposition of Witness for : PW 7

**Name** : திரு. பழனிவேல்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10-11-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது போளூரில் வசித்து வருகிறேன். இறந்து போன சக்திவேல் என் மைத்துனர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இறந்து போன சக்திவேலை எதிரி தான் கல்லை தூக்கி போட்டு அடித்ததாக கேள்விப் பட்டேன். நான் மருத்துவமனையில் சென்று பார்த்தேன். பேசும் நிலையில் இல்லை பின்னர் அவர் இறந்து விட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை,

ஒம்/- பழனிவேல்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**<u>SESSIONS CASE NO. 76/2015</u>**

**<u>Deposition of Witness for : PW 8</u>**

**Name** : திரு. மாதேஸ்வரன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10-11-2022.**

**<u>முதல் விசாரணை</u>** -

நான் தற்போது நீப்பத்துறையில் வசித்து வருகிறேன். இறந்து போன சக்திவேலை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். சக்திவேல் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் என்ன எழுதி இருக்கிறது என்று எனக்கு தெரியாது. மேலும் மகஜரில் உள்ள கையொப்பமும் என்னுடையது. என் முன்பு எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகஜரில் உள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4. என்னுடைய கடையில் வைத்து போலீசார் கையெழுத்தை பெற்றுக்கொண்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

போலீசார் விசாரணையில் 3.9.2013ந் தேதி காலை 6.30 மணிக்கு என் சொந்த வேலையாக ரோடில் போய்க்கொண்டு இருந்த போது அத்திப்பாடி கூட்ரோடு அருகே செங்கம் போலீசார் ஆஜர் எதிரியை கைது செய்தார்கள். அப்போது எதிரி தம்மிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும், ஆறுமுகம் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையெழுத்திட்டோம் அதன் அடிப்படையில் ஆஜர் எதிரி தான் மறைத்து வைத்திருந்த நீப்பத்துறை கிராமம் வெங்கடேச பெருமாள் கோயில் பின்புறம் தென்பெண்னை ஆற்றங்கரையில் முட்புதரில் மறைத்து வைத்திருந்த இரண்டு செங்களை எடுத்து ஆஜர் என்றும், அதை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும்,

அதில் சாட்சிகளான நானும், ஆறுமுகம் என்பவரும் கையெழுத்து இட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பற்ற வேண்டும் என்றும், கடை வரி வசூல் செய்பவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை,

ஒம்/- மாதேஸ்வரன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 76/2015**

**Deposition of Witness for : PW 9**

**Name** : திரு. சத்யா
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10-11-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது நீப்பத்துறையில் வசித்து வருகிறேன். நான் நீப்பத்துறை ஸ்ரீ பிரசன்ன வெங்கட்ரமன பெருமாள் கோயில் வெளியே பூஜை சாமான்கள் விற்பனை செய்யும் கடை வைத்துள்ளேன். நான் மாலை 4 மணிக்கெல்லாம் வீட்டிற்கு சென்று விடுவேன். இறந்து போன சக்திவேலை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையில் இறந்து போன சக்திவேலின் தாய் பானுமதியை தெரியும் ஆடி 18 திருவிழா முன்னிட்டு தெருஓர கடைகளுக்கு சுங்கம் வசூலிக்க ஏழுமலை என்பவர் ஏலம் எடுத்திருந்தார் என்றும், சுங்கம் வசூலிக்க ஆஜர் எதிரியை நியமித்திருந்தார் என்றும், 3.8.2013ந் தேதி பானுமதி கடையின் அருகே பஞ்சு மிட்டாய் கடை வைத்திருந்தார்கள் என்றும், சுங்கம் வசூலிக்கும் எதிரி இறந்து போன சக்திவேலிடம் தகராறு செய்தார் என்றும், எதிரி சக்திவேலை அசிங்கமாக திட்டினார் என்றும், 30.8.2013ந் தேதி இரவு 8 மணிக்கு நான் கடையை அடைத்து விட்டு சென்று விட்டேன் என்றும், மறுநாள் கடையை திறந்தபோது பானுமதி கடைக்கு வெளியே கட்டிலில் படுத்திருந்த சக்திவேலை எதிரி முன்விரோதம் காரணமாக சக்திவேலை கல்லால் அடித்தார் என்றும், அதனால் சக்திவேல் ஆஜர் எதிரியை துரத்தி சென்றார் என்றும், மீண்டும் இரவு சக்திவேல் கட்டில் மல்லாந்து படுத்திருந்த போது இரண்டு செங்கல்லால் சக்திவேலின் உயிர் நாடியில் அடித்து விட்டு எதிரி

ஓடிவிட்டார் என்றும், சக்திவேல் தீர்த்தமலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாகவும், சக்திவேல் தனக்கு சிறுநீர் கழிக்கும் போது ரத்தம் வருவாதாக கூறினார் என்றும், பின்னர் சக்திவேலின் தாயார் சக்திவேலை அரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றும், அங்கு சிகிச்சை பலனின்றி சக்திவேல் இறந்து விட்டார் என்று அவர் தாயார் கூறினார் என்றும், சுங்கம் பணம் வசூலிக்கும் போது ஏற்பட்ட முன் விரோதத்தால் எதிரி சக்திவேலை தாக்கினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது சுங்க வரி எதிரி தான் வசூலித்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> -** இல்லை.

ஒம்/- சத்யா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 76/2015**

**Deposition of Witness for : PW 10**

| | |
|---|---|
| **Name** | : திரு. ஏழுமலை |
| **Father Name** | : |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10-11-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது நீப்பத்துறை கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்து போன சக்திவேலை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. ஸ்ரீ பிரசன்ன வெங்கட்ரமனா கோயிலில் கடைகள் எதுவும் கிடையாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையில் இறந்து போன சக்திவேலின் தாய் பானுமதியை தெரியும் ஆடி 18 திருவிழா முன்னிட்டு தெருஓர கடைகளுக்கு சுங்கம் வசூலிக்க ஏழுமலை என்பவர் ஏலம் எடுத்திருந்தார் என்றும், சுங்கம் வசூலிக்க ஆஜர் எதிரியை நியமித்திருந்தார் என்றும், 3.8.2013ந் தேதி பானுமதி கடையின் அருகே பஞ்சு மிட்டாய் கடை வைத்திருந்தார்கள் என்றும், சுங்கம் வசூலிக்கும் எதிரி இறந்து போன சக்திவேலிடம் தகராறு செய்தார் என்றும், எதிரி சக்திவேலை அசிங்கமாக திட்டினார் என்றும், 30.8.2013ந் தேதி இரவு 8 மணிக்கு நான் கடையை அடைத்து விட்டு சென்று விட்டேன் என்றும், மறுநாள் கடையை திறந்தபோது பானுமதி கடைக்கு வெளியே கட்டிலில் படுத்திருந்த சக்திவேலை எதிரி முன்விரோதம் காரணமாக சக்திவேலை கல்லால் அடித்தார் என்றும், அதனால் சக்திவேல் ஆஜர் எதிரியை துரத்தி சென்றார் என்றும், மீண்டும் இரவு சக்திவேல் கட்டில் மல்லாந்து படுத்திருந்த போது இரண்டு செங்கல்லால் சக்திவேலின் உயிர் நாடியில் அடித்து விட்டு எதிரி ஓடிவிட்டார் என்றும், சக்திவேல் தீர்த்தமலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று

வந்ததாகவும், சக்திவேல் தனக்கு சிறுநீர் கழிக்கும் போது ரத்தம் வருவாதாக கூறினார் என்றும், பின்னர் சக்திவேலின் தாயார் சக்திவேலை அரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார் என்றும், அங்கு சிகிச்சை பலனின்றி சக்திவேல் இறந்து விட்டார். சுங்க பணம் வசூலிக்கும் போது ஏற்பட்ட முன் விரோதத்தால் எதிரி சக்திவேலை தாக்கினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது சுங்க வரி எதிரி தான் வசூலித்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை

ஒம்/- ஏழுமலை

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.